(3) கவன ஈர்ப்பு.

பாரதிதாசன் நகர் மாயாண்டி காலனி, ரோட்டரி நகர் பகுதியிலே கள்ளச் சாராய விற்பனையாளரிடையே ஏற்பட்ட சச்சரவால் அப்பகுதி மக்கள் பாதிப்பு குறித்து.

திரு. மு. அரங்கநாதன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 22—2—78 ஆம் தேதியிட்ட ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தை நான் கொடுத்தேன். சென்னை திருவல்லிக்கேணி தொகுதியைச் சார்ந்த பாரதிதாசன் நகர். . .

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : Mr. Deputy Speaker, Sir, under Rule 41, the hon. Member can only read the Notice he has given, but he is making a speech.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் அதுபற்றிப் பேசக்கூடாது. நிகழ்ச்சிநிரலில் உள்ள உங்கள் அறிவிப்பைப் படியுங்கள்.

திரு. மு. அரங்கநாதன் : தலைவர் அவர்களே, 'சென்னை திருவல்லிக்கேணி தொகுதியைச் சார்ந்த பாரதிதாசன் நகரில் உள்ள மாயாண்டி காலனி மக்களும், திருவல்லிக்கேணி சேர்ந்த ரோட்டரி நகர்ப் பகுதி மக்களும், 19—2—1978 ஆம் தேதி இரவு 1.45 மணிக்கு அப்பகுதியைச் சேர்ந்த சாராய விற்பனையாளர்களிடையே ஏற்பட்ட சண்டை காரணமாக, குடும்பம் குடும்பமாக வீட்டை விட்டு வெளியேறி இ-2 காவல் நிலையத்திற்குச் சென்று பாதுகாப்புத் தேடி அடைக்கலம் புகவேண்டியிருந்த நிலை குறித்து' மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, எட்வர்ட் எலியட்ஸ் ரோடுக்கும் லாயிட்ஸ் ரோடுக்கும் இடையில் மாயாண்டி காலனியும் ரோட்டரி நகரும் அருகருகே அமைந்துள்ளன. மாயாண்டி காலனியைச் சேர்ந்த ஆதி திராவிடர்களுக்கும் ரோட்டரி நகரைச் சேர்ந்த தெலுங்கு பேசும் ஒட்டர் இனத்தவர்களுக்கும் இடையே ஏற்கனவே மனக் கசப்பு இருந்து வந்திருக்கின்றது. 17—2—1978 அன்று போலீசார் நடத்திய சாராயவேட்டையில், ரோட்டரி நகரைச் சேர்ந்த, கள்ளச்சாராயம் விற்கும் நான்கு பேரிடமிருந்து 400 லிட்டர்

1978 மார்ச் 7] [திரு. கி. மனோகரன்]

கள்ளச்சாராயம் கைப்பற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து, எட்டுமுறை தண்டனை பெற்ற குப்பன் என்ற கள்ளச்சாராய விற்பனையாளருக்கும், ரோட்டரி நகரைச் சேர்ந்த சிலருக்கும், மாயாண்டி காலனியைச் சேர்ந்த சிலருக்கும் பிறிய தகராறு ஏற்பட்டது. மாயாண்டி காலனியைச் சேர்ந்தவர்கள்தான் காவல் துறையினருக்கு தகவல் கொடுத்திருப்பர் என்று குப்பன் சந்தேகப்பட்டதால் நடந்த இந்தத் தகராறில் குப்பனுக்கும் ஆறுமுகம் என்பவருக்கும் காயம் ஏற்பட்டது. இது சம்பந்தமாக வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு, தகராறு செய்தது குப்பன்தான் என்று தெரிய வந்ததால் வழக்கு கைவிடப்பட்டது. அதற்குப் பிறகு, அதே இரவு, நகர துணைக் காவல் கண்காணிப்பாளர், சட்டமும் ஒழுங்கும் (தெற்கு), ரோட்டரி நகர் பகுதியில் சாராய வேட்டை நடத்தி, 140 லிட்டர் சாராயம் கைப்பற்றப்பட்டு, தாஸ், தாமல், சண்முகம், கணேசன், கொலம்மாள், சித்திரை ஆகியோர் உட்பட 14 பேர்கள் கைது செய்யப்பட்டனர். அன்றைய தினமே அப்பகுதியில் போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு இன்னும் தொடர்ந்து போலீஸ் பாதுகாப்பு கொடுக்கப்பட்டு வருகின்றது. இரு சாராருக்குமிடையே ஒரு சமரசம் ஏற்பட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாயாண்டி காலனியைச் சேர்ந்த சித்திரை என்பவரும் பலமுறை போலீசாரால் குற்றம் சாட்டப்பட்டவர். கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால், இந்த இரண்டு காலனிகளைச் சேர்ந்த கள்ளச் சாராயத் தொழிலில் ஈடுபடுபவர்கள், கட்டுப்பாட்டின்கீழ் வைக்கப்பட்டுள்ளனர். 1978 ஆம் ஆண்டு ஜனவரி, பிப்ரவரி ஆகிய மாதங்களில் மட்டும் இந்தப் பகுதியில் சுமார் எழுபது வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

திரு. மு. அரங்கநாதன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாராய சம்பந்தப்பட்ட வழக்குகள் தொடரப்பட்டது பற்றிய விவரங்களை அமைச்சர் அவர்கள் அளித்தார்கள். நன்றி. ஆனால் ஏற்கனவே, அந்தப் பகுதியில் இரண்டு சாராருக்கும் தகராறு இருந்தது என்று போலீஸ் தரப்பில் சொல்லப்படுகிற தவறான தகவலை இங்கே நிதியமைச்சர் படித்துக் காட்டினார்கள். இது தவறான தகவல். சாராய விற்பனையிலே ஏற்பட்ட தகராறில்

 பாரதிதாசன் நகர் மாயாண்டி காலனி, ரோட்டரி நகர் பகுதியிலே கள்ளச் சாராய விற்பனையாளரிடையே ஏற்பட்ட சச்சரவால் அப்பகுதி மக்கள் பாதிப்பு குறித்து

[திரு. மு. அரங்கநாதன்] [1978 மார்ச் 7

அவர்களுக்குள்ளே அடிதடி ஏற்பட்டு அந்த இரண்டு சாராய விற்பனைக் கோஷ்டி சண்டைகளின் காரணமாக பொதுமக்கள் பாதிக்கப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டு இரவு 1-30 மணிக்கு என் வீட்டிற்கு ஓடி வந்தார்கள், அதற்குப் பிறகு நான் அவர்களை காவல் நிலையத்திற்கு அனுப்பி வைத்தேன், காவல் துறையினரும் அவர்களுக்குப் பாதுகாப்பு தரவேண்டுமென்று சொன்னேன். இதிலே சம்பந்தமில்லாதவர்கள் இணைக்கப்பட்டிருக்கிறார்கள். சம்பந்தப்பட்டவர்கள்மீது வழக்குத் தொடர்வதில் எனக்கு ஆட்சேபனையில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி கேளுங்கள், பதிலுரை சொல்லக்கூடாது.

திரு. மு. அரங்கநாதன் : ஆனால் தொடர்ந்து லாயிட்ஸ் சாலை பக்கம் சாராயத் தொல்லைகள் இருந்து வருகின்றன, அமைச்சர் அவர்கள் கவனித்து நடவடிக்கை எடுப்பார்களா ?

(முற்பகல் 10-30)

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : ஏற்கனவே எனது அறிக்கையில் அதை நான் தெளிவுபடுத்தியிருக்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து : தலைவரவர்களே, நேற்றைய தினம் 42-வது விதியின்கீழே ஒரு நோட்டீஸ் கொடுத்தேன். அதை சட்டை செய்யாத காரணத்தால். . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தாங்கள் கொடுத்தேன் என்று சொன்னது, ஆய்வில் இருக்கிறது. எனவே அதைப் பற்றி பேரவைத் தலைவருடைய அறையில் வந்து கேட்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(2) தகவல் கோரல் (தொடர்ச்சி)

(ஆ) 42-வது விதியின் கீழ் கொடுத்த அறிவிப்பு குறித்து

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, ஒரு முக்கியமான பிரச்னையைப்பற்றி 42-வது விதியின்கீழ் ஒரு தீர்மானம் கொடுத்திருந்தேன், மானியம் வரும்பொழுது அதைப்பற்றிப் பேசிக் கொள்ளலாம் என்று பதில் கொடுத்து எனக்குத் தபால் எழுதப்